Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 100

வெள்ளிக்கிழமை
06 மார்ச் 2026

மாசி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

காணாமற்போன

## ஆவளை மீனவர்கள் தமிழகத்தில் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 6
யாழ்ப்பாணம் ஆவளை பகுதியில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்றநிலையில் காணாமற்போன இரண்டு மீனவர் »11

# யாழில் குறைகிறது எரிபொருள் வரிசை!

### இன்று நிலைமை சீராகும்

யாழ்ப்பாணம், மார்ச் 6
தொடர்ச்சியான விநியோகம் காரணமாக, யாழ்ப்பாணத்தில் நேற்று எரிபொருள் வரிசைகள் வெகுவாகக் குறைந்துள்ளன. அநேகமாக இன்று நிலைமை சீராகும் என பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன. »11

## ஈரானியக் கப்பலொன்று இலங்கையில் நங்கூரம்!

### கொழும்பில் உச்சப் பரபரப்பு

கொழும்பு, மார்ச் 6
இலங்கையில்நங்கூரமிடுவதற்கு ஈரானியக் கப்பலொன்று அனுமதி கோரியிருந்த நிலையில், அதற்கு ஜனாதிபதி அநுர நேற்று இரவு அனுமதி வழங்கியுள்ளார்.
இந்துமா சமுத்திரத்தில் இலங்கைக்கு அருகாகப் பயணித்த ஈரானியப் போர்க்கப்பல் அமெரிக்காவால் நேற்றுமுன்தினம் தாக்கி அழிக்கப்பட்டது. இதையடுத்து, ஈரானின் மற்றொரு கப்பல் இலங்கையில் நங்கூரமிட »11

## அமெரிக்க அத்துமீறலுக்கு பதில் நடவடிக்கை என்ன?

### கண்டனம்கூட தெரிவிக்காதமை ஏன்? நாடாளுமன்றில் தயாசிறி கடும்பிடி



கொழும்பு, மார்ச் 6
ஈரானியக் கப்பலை அமெரிக்கா தாக்கியமைக்கு எதிராக, ஸ்ரீலங்கா அரசாங்கம் ஏன் கண்டனம்கூடத் தெரிவிக்கவில்லை? – இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போது அவர் »11

ஈஸ்டர் தாக்குதல்

## மூன்றாம் சந்தேகநபராக பெயரிடப்பட்டார் சாலே!



கொழும்பு, மார்ச் 6
அரச புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலே, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் மூன்றாவது சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ளார்.
ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங் »11

## ம.எண்ணெய் விநியோகம் யாழில் இன்றும் தொடரும்

யாழ்ப்பாணம், மார்ச் 6
யாழ்ப்பாணத்தில் உள்ள பல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் இன்று இடம்பெறும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன தகவல்கள் தெரிவிக்கின்றன.
யாழ்ப்பாணத்துக்கு நேற்று மண்ணெண்ணெய் விநி »11

## தரமற்ற நிலக்கரியால் விரைவில் மின்வெட்டு

### பொதுப்பயன்பாட்டு ஆ.குழு எச்சரிக்கை



கொழும்பு, மார்ச் 6
தரம் குறைந்த நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதால், எதிர்வரும் மாதங்களில் மின்வெட்டுக்குச் சாத்தியங்கள் »11

## கடற்பரப்புகளில் பெரும் பதற்றம்

### எல்லைதாண்ட வேண்டாம் என்று மீனவர்களுக்கு அரசு அறிவுறுத்து

கொழும்பு, மார்ச் 6
சர்வதேச கடற்பரப்புகளில் தற்போது நிலவும் பதற்றமான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட வேண்டாம் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் எச்சரிக்கை »11

ஈரானியக் கப்பலை

## காட்டிக் கொடுத்தது இலங்கையே!

### மஸ்தான் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 6
அரசாங்கம் ஈரானியக் கப்பலுக்கு உதவி வழங்காவிட்டாலும் காட்டிக் கொடுக்காமல் இருந்திருக்கலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் »11

முச்சந்தி முரளி

“இலங்கைக்கு கடலில தான் கண்டம் எண்டது உண்மைதான் கண்டியளோ”

புதுக்குடியிருப்பு – விசுவமடுவில்

## கசிப்புக்குகை முற்றுகை: 600 லீற்றர் கசிப்பு மீட்பு!

### அந்தப் பகுதி மக்கள் அதிரடி

முல்லைத்தீவு, மார்ச் 6
புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடு பகுதியில், கசிப்புக் காய்ச்சும் இடமொன்று மக்களால் நேற்று முற்றுகையிடப்பட்டு »11



வடக்கின் போர்

## முதலாவது இன்னிங்ஸில் சென்.ஜோன்ஸ் முன்னிலை

யாழ்ப்பாணம், மார்ச் 6
யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான வடக்கின்போர் கிரிக்கெட் ஆட்டத்தில், முதலாவது »11



படம்: ஐ.சிவசாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்கொள்வனவுக்காக ரூ. 10,000 மில்.ஒதுக்கீடு!

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



**கொழும்பு, மார்ச் 6**

**அரசாங்கம் இம்முறை நெற்கொள்வனவுக்காக 10,000 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதுடன் நெல்லுக்கான கொள்வனவு விலைகளையும் அதிகரித்துள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிரதமரிடமான எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடு நெல் 120 ரூபா, சம்பா நெல் 130 ரூபா, கீரிச்சம்பா நெல்140 ரூபா என்ற அடிப்படையிலேயே அரசாங்கத்தினால் நெற்கொள்வனவு முன்னெடுக்கப்படுகிறது. நெற்கொள்வனவுகளை மேற்கொள்வதற்காக அரசாங்கத்தின் அனைத்து நெற்களஞ்சியசாலைகளும் திறக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நெல்லுக்கு உத்தரவாத விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தரநிர்ணயத்துடன் உற்பத்தி செய்யப்பட்டுள்ள நெல்லை விவசாயிகள் நெல் சந்தைப்படுத்தும் சபையின் களஞ்சியசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்க முடியும். அதற்கான அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

50,000 மெற்றிக் தொன் நெல்லைக் களஞ்சியப்படுத்தும் வகையில் களஞ்சியசாலைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அதே நேரம் சம்பா மற்றும் கீரிச் சம்பா ஆகியவற்றின் விலைகளை உயர்த்துவதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது -என்றார். (ச-இ)

### சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 05.03.2026 | வியாழக்கிழமை | 0832 |

DLB

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| M | 3 5 7 7 3 3 |

### Super Ball

DLB

| திகதி | தினம் |
|---|---|
| 05.03.2026 | வியாழக்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 3098 | I | 30 36 49 72 |

### சனிதா

DLB

| திகதி | தினம் |
|---|---|
| 05.03.2026 | வியாழக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| F | 07 20 21 36 | 5259 |

### SASIRI

DLB

| திகதி | தினம் |
|---|---|
| 05.03.2026 | வியாழக்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 0928 | 07 44 50 |

### லக்ன ராசி

| திகதி | தினம் |
|---|---|
| 05.03.2026 | வியாழக்கிழமை |

DLB

| மிதுனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 34 39 40 61 | 4810 |

### KAPRUKA

DLB

| திகதி | தினம் |
|---|---|
| 05.03.2026 | வியாழக்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| K | 01 | 11 35 58 72 | 2274 |

### அத கோடிபதி

DLB

| திகதி | தினம் |
|---|---|
| 05.03.2026 | வியாழக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| Y | 33 53 64 66 | 2924 |

## வாகன சார்ஜிங் நிலையம் திறப்பு

கொழும்பு, மார்ச் 6

இலங்கையின் பசுமைப் போக்குவரத்துத் துறையில் ஒரு முக்கியமான மாற்றமாக, 'Synogen' நிறுவனம் நாட்டின் முதலாவது விரிவான மின்சார வாகன சார்ஜிங் நிலையத்தைக் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அண்மையில் அறிமுகப்படுத்தியது. அனைத்து வகையான மின்சார வாகனங்களுக்கும் ஒரே இடத்தில் சார்ஜ் செய்யும் வசதி இங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை வணிக மையங்கள் மற்றும் சுற்றுலாத் தளங்களை உள்ளடக்கி நாடு முழுவதும் விரிவுபடுத்த Synogen நிறுவனம் திட்டமிட்டுள்ளது. (ச-இ)


## சமூக பாதுகாப்புப் பங்களிப்பு வரி திருத்தச்சட்டம் வர்த்தமானியில்

கொழும்பு, மார்ச் 6

சமூக பாதுகாப்புப் பங்களிப்பு வரித் திருத்தச் சட்டவரைவு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கையொப்பத்துடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வரியின்கீழ் பதிவுசெய்வதற்கான வருடாந்த வருமான எல்லை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வகையில் 60 மில்லியன் ரூபாவிலிருந்து 36 மில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, மோட்டார் வாகனங்கள் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. (ச-இ)



## மத்துகமவில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, மார்ச் 6

மத்துகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றை இலக்குவைத்து துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்பதுடன், குறித்த வீட்டுக்கு மாத்திரம் சேதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மத்துகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)




## டீசல் பதுக்கிய ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 6

சட்டவிரோதமான முறையில் டீசல் சேமித்துவைத்திருந்த சந்தேகநபர் ஒருவரை திறப்பனைப் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

பண்ணையொன்றில் சட்டவிரோதமாக சேமித்து மறைத்துவைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 900 லீற்றர் டீசல் அடங்கிய 10 பீப்பாய்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கலன்பிந்துனுவெவ பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

## டித்வா சூறாவளிப் பாதிப்பு; கல்விசார் நிறுவனங்களை சீரமைக்க ரூ.2,274 மில்லியன்

கொழும்பு, மார்ச் 6

கடந்த ஆண்டு இலங்கையைத் தாக்கிய 'டித்வா' சூறாவளியால் சேதமடைந்த கல்வி நிறுவனங்களை உடனடியாகப் புனரமைப்பதற்கான 2,274.23 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



இந்த விசேட நிதி ஒதுக்கீட்டுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 9 மாகாணங்களிலுமுள்ள 150 தேசிய பாடசாலைகளைப் புனரமைப்பதற்காக 1,988.83 மில்லியன் ரூபாவும், 7 தேசிய கல்வியியற் கல்லூரிகளைப் புனரமைப்பதற்காக 285.40 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மண்சரிவு அபாயத்தைத் தடுக்கும் புனரமைப்புப் பணிகளுடன் மேலதிகமாக, அதிக சரிவுகளைக் கொண்ட பகுதிகளில் அமைந்துள்ள கல்வி நிறுவனங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதாபிமான உதவிகள் வழங்க இலங்கை தயார்!

## விஜித ஹேரத் உறுதி

**கொழும்பு, மார்ச் 6**
**மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் தீவிரமடைந்து வரும் போர்ச் சூழலைக் கருத்திற்கொண்டு பாதிக்கப்பட்ட நாடுகளுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளை வழங்க இலங்கை எவ்விதத் தயக்கமுமின்றி முன்வரும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அறிவித்துள்ளார்.**

மத்திய கிழக்கின் தற்போதைய இக்கட்டான நிலை குறித்து கட்டார், லெபனான், ஜோர்தான் மற்றும் குவைத் ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடன் அமைச்சர் விஜித ஹேரத் தொலைபேசி ஊடாக விசேட கலந்துரையாடல்களை முன்னெடுத்தார்.

இதன்போது, அந்த நாடுகள் எதிர்நோக்கியுள்ள நிலைவரங்கள் தொடர்பாகத் தனது ஆழ்ந்த கவலையையும் அவர் பகிர்ந்துகொண்டார்.

மத்தியகிழக்குப்பிராந்தியத்தில் ஏதேனும் அவசர நிலைமைகள் ஏற்படும் பட்சத்தில், அந்த நாடுகளால் கோரப்படும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் தயக்கமின்றி முன்வரும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, போர்ச்சூழல் நிலவும் அந்த நாடுகளில் வசிக்கும் ஆயிரக்கணக்கான இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும் என்றும் அமைச்சர் விஜித ஹேரத் விசேட இந்தச் சந்தர்ப்பத்தில் கோரிக்கை விடுத்தார் என்று தெரிவிக்கப் படுகின்றது. (ச-இ)

# கமேனி மறைவுக்கு இலங்கை இரங்கல்

கொழும்பு, மார்ச் 6
அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டு இராணுவத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி கமேனி மறைவுக்கு இலங்கை அரசாங்கம் இரங்கல் வெளியிட்டுள்ளது. ஈரான் தூதரகத்தில் வைக்கப்பட்டுள்ள அனுதாப புத்தகத்தில் பதிவிட்டு இரங்கல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார். (ச-இ)

# 85 இடங்களுக்கு பலத்த பாதுகாப்பு

கொழும்பு, மார்ச் 6
மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் நிலைமையைக் கருத்திற்கொண்டு இலங்கையில் 85 இடங்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. தூதரகங்கள், உயர்ஸ்தானிகராலயங்கள் மற்றும் அவர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் என 85 இடங்களுக்கு இவ்வாறு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# போதைப்பொருள்களுடன் இந்தியர்கள் இருவர் கைது



கொழும்பு, மார்ச் 6
'குஷ்' மற்றும் 'ஹஷீஷ்' ஆகிய போதைப்பொருள்களை நாட்டுக்குள் கடத்த முயன்ற குற்றச்சாட்டில் இரண்டு இந்தியப் பிரஜைகள் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வைத்து சுங்கப் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் தாய்லாந்தின் பெங்கொக் நகரிலிருந்து கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்துள்ளனர். கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்கள் சுமார் 3 கோடியே 22 இலட்சம் ரூபா பெறுமதியுடையவை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# வழமைக்குத் திரும்பும் விமானசேவைகள்!

மத்திய கிழக்குப் பிராந்தியத்துக்கான விமான சேவைகளை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வழமைக்குக்கொண்டுவந்துள்ளது என்று அறிவித்துள்ளது. கொழும்பிலிருந்து டுபாய் நோக்கிய விமானம் பிற்பகல் 14:50க்குப் புறப்பட்டு, டுபாயிலிருந்து இரவு 19:10க்கு (டுபாய் நேரம்) மீண்டும் கொழும்பு திரும்பும். கொழும்பிலிருந்து ரியாத் நோக்கிய விமானம் மாலை 18:15க்குப் புறப்பட்டு, ரியாத்திலிருந்து இரவு 22:35க்கு (ரியாத் நேரம்) மீண்டும் கொழும்பு திரும்பும். பயணிகள் தங்களின் விமானங்களின் தற்போதைய நிலையை www.srilankan.com என்ற இணையத்தளத்தின் ஊடாகச் சரிபார்த்துக் கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# கமேனி மறைவுக்கு ரணில் அனுதாபம்

கொழும்பு, மார்ச் 6
ஈரான் உச்சத் தலைவர் அயதுல்லா அலி கமேனியின் மறைவுக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று ஈரான் தூதரகத்துக்குச் சென்று அனுதாபம் தெரிவித்துள்ளார். ஈரான் தலைவரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காகக் கொழும்பிலுள்ள ஈரான் தூதரகத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அங்கு சென்ற முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு வைக்கப்பட்டுள்ள புத்தகத்தில் தனது அனுதாபச் செய்தியைப் பதிவுசெய்துள்ளார். (ச-இ)




# பாலுக்குப் பூனை காவலோ?

கொழும்பு பங்குச்சந்தையைவிட எங்கட ஊரில இருக்கிற பெற்றோல் செற்றுகளில புழங்கிற காசைப் பார்த்தால், 'யாழ்ப்பாணம் மத்திய வங்கி' எண்ட ஒண்டைத் தொடங்கலாம் போல கிடக்கு. அந்தளவுக்கு யாழ்ப்பாணிஸ் ஒரு வெறித்தனத்தோட பெற்றோல் அடிச்சுக் கொண்டிருக்கினம். வெறும் மூண்டே மூண்டு நாளில மட்டும் 30 கோடி ரூபாவுக்கு எங்கட சனம் பெற்றோலை அடிச்சுத் தள்ளியிருக்கு. சாதாரணமா ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் லீற்றர் தேவைப்படுற இடத்தில, இப்ப அஞ்சு நாளில பத்து இலட்சம் லீற்றர் பெற்றோல் வித்து முடியுதாம். ஆனால் றோட்டில வழக்கத்தை விட வாகன ஓட்டம் சரியாக் குறைஞ்சு போட்டுது. அப்ப இப்பிடி அடிபட்டு முப்பது கோடிக்கு வாங்கின பெற்றோல் முழுக்க ஆவியாப் போட்டுதோ? அதுதான் இல்லை. இன்னும் நல்லா பிரச்சினை முத்தி, செற்றுகளிலையும் பெற்றோல் இல்லையெண்ட நிலை வரேக்க, நாலைஞ்சு மடங்கா விலையேத்தி கறுப்புச்சந்தையில விக்கத்தான் பெற்றோலை இப்பிடிக் கனபேர் அடிச்சுத் தள்ளுகினம்.

ஏழாலையில 800 லீற்றர் டீசலைப் பதுக்கி வைச்சிருந்த ரெண்டு பேரைப் பொலிஸ்காரர் போய்ப் பிடிச்சிருக்கினம். இது வெறும் ஒரு பரல் டீசலுக்கு ஒரு போத்தல் பதம் தான். இப்பிடிப் பதுக்கல் பெருச்சாளியளலா தான் கனசனம் வெயிலுக்கையும் கால்கடுக்க லைனில நிக்கவேண்டிய நிலை. அவரவர் தங்கட தேவைக்கு மட்டும் அடிச்சினம் எண்டால் உந்த லைன் தேவையேயில்லாத ஆணிதான். ஆனால் பிள்ளையளுக்குச் சீதனம் சேர்க்கிற மாதிரி, எங்கடையாக்கள் பின்னடிக்குத் தேவைப்படுமெண்டு பெற்றோலைச் சேர்க்கத் தொடங்கி யிருக்கினம்.

அரசாங்கம் என்னடாண்டால், 'கையிருப்பில பெற்றோல் தாராளமா இருக்கு, பயப்பிடாதையுங்கோ' எண்டு அறிக்கை மேல அறிக்கை விடுகுது. வெறும் அறிக்கையை மட்டும் விட்டால் காணுமோ? உருப்படியான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருந்தால் இப்பிடி கியூவில பெற்றோலுக்கு நிக்கவேண்டிய நிலையே வந்திருக்காதே. ஒவ்வொருநாளும் யாழ்ப்பாணத்துக்கு மட்டும் 3 இலட்சம் லீற்றர் பெற்றோல் வருது எண்டு புள்ளிவிவரம் காட்டுகினம், அது 'ஓடர்' போட்ட கணக்குத் தான். ஆனால் பவுஸரில வாற பெற்றோல் சரியான இடத்துக்குப் போகுதா எண்டும் செக் பண்றேலை. பெற்றோல் செற்றுகளில இடைக்கிடை பொலிஸ்காரரை அனுப்பி, பெற்றோல் விநியோகத்தைக் கண்காணிக்கிறம் எண்டு அரசாங்கம் படம் காட்டுது. ஆனால் பாலுக்குப் பூனையைக் காவல் வைக்கிறதும் ஒண்டுதான், பெற்றோல் செற்றுக்கு பொலிஸ்காரரை அனுப்பிறதும் ஒண்டுதான். ஏனெண்டால் பொலிஸ்காரர் தாங்கள் செற்றில நிக்கேக்க, தங்களுக்குத் தெரிஞ்சவையை அங்க கூட்டியந்து, அவைக்குத் தான் பெற்றோலை அடிக்கினம். சனம் கியூவில காய்ஞ்சு கொண்டு நிக்க, பொலிஸ்காரர் தங்கட விளையாட்டு.

இதெல்லாத்துக்கும் ஒரே தீர்வு 'கியூ.ஆர்.' சிஸ்டத்தை திருப்பிக் கொண்டுவாறதுதான். ஆனால் அதுக்கு திசைகாட்டிக்காரர் ஏன் பின்னடிக்கினம் எண்டதுதான் விளங்காமல் கிடக்குது. போற போக்கைப் பார்த்தால், ஈரானில இருக்கிறதைவிட யாழ்ப்பாணத்தில தான் கூடப் பெற்றோல் இருக்கிற நிலை வந்தாலும் அதிசயம் இல்லை கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி

# முல்லைத்தீவில் ஞாயிறு போராட்டம்

**முல்லைத்தீவு, மார்ச் 6**

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆரம்பித்த தொடர்போராட்டம், 9 ஆண்டுகளை நிறைவடைவதை முன்னிட்டு, முல்லைத்தீவு, வட்டுவாகலில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு, மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.**

சர்வதேச நீதி கோரிய இந்தப் போராட்டத்தில், அரசியல் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள், சிவில், சமூக அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் பங்கேற்று ஆதரவு வழங்கி, நீதி கோரும் பொறிமுறைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (க-66)

## செபம்:இறை மனித உறவுப்பாலம்

இறைவேண்டல் என்பது அளவுக்கதிகமான தனிநபர் கோரிக்கைகளை அடுக்கிக்கொண்டு போவதிலும், அச்சடித்த செபங்களை வாசிப்பதிலும் மட்டும் தங்கியதல்ல. ஆழ்மன அமைதியுடன் இறைவனோடு மௌனமாக பரஸ்பர உரையாடலை மேற்கொண்டு இறைவன் வெளிப்படுத்தும் சிந்தனைகள், திட்டங்கள், சித்தங்களை ஏற்று மனத்தெளிவுடன் எமக்கும் பிறருக்கும் பயனுள்ள வகையில் வாழ முற்படுவதாகும்.

"நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை இறைவன் அறிந்திருக்கிறார்" (மத் 6:8) என்று கூறி இயேசு செபிக்கும் முறையைக் கற்பித்துள்ளார். அச் செபம் அழகானது, ஆற்றல் மிக்கது, எப்பொழுதும் நிறைவையும், ஆனந்தத்தையும் தரவல்லது. இறைவனோடு நெருங்கிய தொடர்பில் வாழும் மனிதரின் வார்த்தைகளும் அவ்வாறே அமையுமென இறைவார்த்தை கூறுகிறது. செபம் செய்யும் போது பிறர் பார்த்து புகழவேண்டுமென எதிர்பார்ப்பதை விடுத்து எமது உள்ளத்தையே இறைவன் உற்றுநோக்குகிறார் என நினைவிற்கொள்வோம். செபத்தில் நிலைத்து வாழ்வோரின் வார்த்தைகள் ஞானம் நிறைந்ததாக இருக்கும். நிபந்தனையற்ற ஒப்புரவும், மன்னிப்பும், பகிர்வும் எம்மில் வெளிப்படச் செபிப்போம். கிறிஸ்தவ அழைத்தல் வாழ்வுக்கெதிராக ஈடுபடும் செயல்களிலும் பிறரை இழிவுபடுத்தும் தீய எண்ணங்களிலிருந்தும் எம்மை விடுவித்தருள செபிப்போம்.

யே. சுபீட்சன்
கொழும்புத்துறை

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 6

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மாலுச்சந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கிட்டினன் சிறீகாந்தராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக வடமராட்சிக் கல்வி வலயத் திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ஜனனி லதர்சனும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சிக் கல்வி வலய சமூக விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் சண்முகம் உதயநாதன், வதிரி பரமானந்தா சிறுவர், முதியோர் இல்லத்தின் உப தலைவி திருமதி விஜயகுமாரன் சிவரஞ்சினி, கௌரவ விருந்தினர்களாக அத்தாய் கிராம அலுவலர் சிவராசலிங்கம் சிவசங்கர், அல்வாய் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் இராஜேஸ்வரன் ஆதவன், பாரதிதாசன் முன்பள்ளி முதன்மை ஆசிரியர் திருமதி சபாநாயகி பகீரதசர்மா, மாலுச் சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத் தலைவர் நடராசா கஜன் ஆகியோரும் கலந்துகொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-422)



## தேசிய மட்ட விவாதப் போட்டி; சென்.பற்றிக்ஸ் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

தேசிய ரீதியில் நடத்தப்பட்ட 'விவாத வேள்வி -2026' போட்டியில், யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் விவாத அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

கொழும்பு இந்துக்கல்லூரியில் நடைபெற்ற இந்தப் போட்டியில் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் விவாத அணி, தகுதிச் சுற்றுகளில் முறையே கொழும்பு பிஷப் கல்லூரி, டி.எஸ்.சேனாநாயக்க கல்லூரி, திருகோணமலை கோணேஸ்வராக் கல்லூரி, கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி ஆகியவற்றை வென்று காலிறுதிக்குள் நுழைந்தது.

காலிறுதிப்போட்டியில் மீண்டும் டி.எஸ். சேனாநாயக்க கல்லூரியை வென்று அரையிறுதியில் முஸ்லிம் பெண்கள் கல்லூரியுடன் போட்டியிட்டு மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (ச-20)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 6

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், வாராந்தச் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி ப.சிவனொளிபாதம் 'பஞ்ச அட்சரம்' எனும் தலைப்பில் ஆன்மகச் சொற்பொழிவு ஆற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-66)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியும் ஆதாயமும் தருவதாக இருக்கும்.

**இடபம்:** தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். சகோதரர்கள் கேட்கும் உதவியை செய்து கொடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**மிதுனம்:** மனம் உற்சாகத்துடன் காணப்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குக் குடும்பத்தினருடன் கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கக்கூடும்.

**கடகம்:** இன்று அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும் சில சங்கடங்களும் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** கணவன் -மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். அரசாங்கக் காரியங்கள் தாமதமாகமுடியும்.

**கன்னி:** எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். எதிர்பாராத செலவுகளைச் சமாளிக்கக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும்.

**தனுசு:** அரசாங்க அதிகாரிகளைச் சந்திக்கும் போது பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும். குடும்பத்தில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**கும்பம்:** வீண் செலவுகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்க வேண்டாம். வெளியிடங்களில் உணவு உண்பதைத் தவிர்க்கவும்.

**மீனம்:** உற்சாகமான நாளாக அமையும். ஆனால், புதிய முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டாம். சிலருக்குத் திடீர் செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# காய்நகர்த்துவதில் அவதானம் தேவை

மத்திய கிழக்கில் தற்போது மூண்டுள்ள போர் மேகங்கள், வெறும் பிராந்திய மோதலாக மட்டும் சுருங்கிவிடப் போவதில்லை. இது உலகளாவிய ரீதியில் அரசியல், பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தும் ஒரு பெரும் அதிர்வை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. நவீன உலகம் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட ஒரு சங்கிலித் தொடர் போன்றது. அதில் ஓரிடத்தில் ஏற்படும் விரிசல், முழுச் சங்கிலியையும் பலவீனப்படுத்தும். அந்தவகையில், மத்திய கிழக்கின் அமைதியின்மை வளர்ந்துவரும் நாடுகளுக்கு-இலங்கைக்கு -நிச்சயம் சவால்களை ஏற்படுத்தும்.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் இலங்கைக்கு நேரடியாக எரிபொருள், சுற்றுலாத்துறை, தேயிலை ஏற்றுமதி போன்றவற்றில் பெருத்த அடியைக் கொடுக்கும் என்பதை எவரும் மறுக்கமுடியாது. ஏற்கனவே பொருளாதார நெருக்கடியால் வங்குரோத்து நிலையை அடைந்து, சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளுடன் மெல்ல மெல்ல மீண்டு வரும் இலங்கைக்கு, இது ஒரு பெரும் தலைவலி யாகவே அமையும். இக்கட்டான இந்தப் பூகோள அரசியல் சூழலில், நாடு என்ற ரீதியில் மிகவும் அவதானமாக காய்களை நகர்த்த வேண்டியுள்ளது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இலங்கையின் உள்நாட்டு அரசியல் களம் ஆரோக்கியமானதாகத் தெரியவில்லை.

எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரை, தற்போதைய உலகளாவிய நெருக்கடியையும் பொருளாதாரச் சிக்கலையும் பயன்படுத்தி, அரசாங்கத்தை எப்படியாவது வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்ற அதிகாரப்போட்டியில் முனைப்புக் காட்டுவதாகத் தெரிகிறது. மறுபுறம், அரசாங்கமும் எதிர்க்கட்சிகளின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளைப் புறந்தள்ளி, தனித்து இயங்கித் தமது பலத்தை நிரூபிக்க முயற்சிப்பதும் பெரும் பலவீனமாக மாறிவிடும். அரசியல் குரோதங்களும், கட்சி பேதங்களும், சுயலாபச் சிந்தனைகளும் நாட்டின் நலனைவிட மேலோங்கி நின்றதன் விளைவையே இலங்கை இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கின்றது.

வறட்டுக் கௌரவங்களையும், முரட்டுப் பிடிவாதங்களையும் கைவிட்டு, தற்போதைய சர்வதேசநெருக்கடியை எதிர்கொள்வதற்கான வழிமுறைகளை இப்போதே ஆராயத் தொடங்குவதே புத்திசாலித்தனம். இலங்கை தற்போது ஒரு மெல்லிய நூலிழையிலேயே பயணித்துக்கொண்டிருக்கின்றது. இன்னம் நிலையான பொருளாதார வளர்ச்சியை இலங்கை கண்டுவிடவில்லை. கடந்த காலகசப்பான அனுபவங்கள் நமக்குப் புகட்டிய பாடங்களை மறந்துவிடக்கூடாது. பூகோள அரசியல் நெருக்கடிகள் இலங்கையை மீண்டும் ஒரு பொருளாதாரப் பள்ளத்தில் தள்ளிவிடாமல் இருக்கவேண்டுமாயின், அதற்கான தயார்ப்படுத்தல்களை ஒன்றுபட்டு இப்போதே ஆரம்பிக்கவேண்டியது கட்டாயம்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com







## பொய்யாமொழி

**தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்**
**தம்தம் வினையான் வரும்**

**பொருள்:** தம் மக்களே தம்முடைய பொருள்கள் என்று அறிஞர் கூறுவர்; மக்களாகிய அவர்தம் பொருள்கள் அவரவருடைய வினையின் பயனால் வந்து சேரும்.



# 15,839 வெற்றிடங்களுக்கு அரசசேவை ஆட்சேர்ப்பு

**கொழும்பு, மார்ச் 6**
**அரசசேவையில் நிலவும் ஆட்பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில், பல்வேறு அமைச்சுகள் மற்றும் மாகாணசபைகளில் உள்ள 15,839 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

பிரதமரின் செயலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அரசசேவையின் அவசியம், முன்னுரிமைகள் மற்றும் ஆட்சேர்ப்புக்கான காலக்கெடு ஆகியவற்றை அடையாளம் காண்பதற்காக அமைச்சரவை அங்கீகாரத்துடன் குழுவொன்று நிறுவப்பட்டது.

குறித்த குழுவின் பரிந்துரைகளை ஏற்று, தற்போது 15,839 புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. தகைமைகளின் அடிப்படையில் சரியான ஆட்சேர்ப்பு முறையைப் பின்பற்றி, அரசசேவையின் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். (ச-இ)



## வாகன இறக்குமதிச் செலவு ஜனவரியில் சரிவு

கொழும்பு, மார்ச் 6
இலங்கையில் தனியார் வாகனங்கள் மற்றும் வணிக வாகனங்கள் உட்பட வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான செலவு கடந்த ஜனவரியில் 224 மில்லியன் அமெரிக்க டொலராகக் குறைந்துள்ளது என மத்திய வங்கியின் சமீபத்திய தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் பதிவான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான செலவு 301 மில்லியன் அமெரிக்க டொலராகும். இந்த ஆண்டு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான செலவு கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது சுமார் 1.5 பில்லியன் அமெரிக்க டொலராகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## காற்று மாசு அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 6
இலங்கையின் பல நகரப் பகுதிகளில் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலைக்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரித்துள்ளது. கோட்டை , காலி, கொலன்னாவ, தம்புள்ளை, கேகாலை, அநுராதபுரம் மற்றும் பொலநறுவை ஆகிய இடங்களிலேயே காற்றின் தரம் ஆரோக்கியமற்றநிலையை எட்டியுள்ளது.

அண்டை நாடுகளான இந்தியா மற்றும் பாகிஸ்தானில் வீசும் காற்றினால் அடித்துவரப்படும் புகைத்துகள்கள் மற்றும் மாசுக்கள் வளியின் தரத்தைச் சீர்குலைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## எரிபொருள் பதுக்கல்: விசேட சுற்றிவளைப்பு!

இலங்கையில் நிலவும் எரிபொருள் நெருக்கடியைப் பயன்படுத்தி, சட்டவிரோதமான முறையில் எரிபொருளைச் சேகரித்து அதிக விலைக்கு விற்பனை செய்யும் நபர்களுக்கு எதிராகப் பொலிஸார் கடும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டவிரோத விற்பனையில் ஈடுபடுபவர்கள் மீது எவ்விதத் தடையுமின்றிச் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இலங்கை மாணவருக்கு இந்தியா புலமைப்பரிசில்

கொழும்பு, மார்ச் 6
இந்திய அரசாங்கம் 2026 - 2027 ஆம் கல்வியாண்டுக்காக 200 முழுமையான நிதியுதவியுடனான புலமைப்பரிசில்களை அறிவித்துள்ளது. மருத்துவம், துணை மருத்துவம் மற்றும் சட்டம் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பாடத்துறைகளிலும் இந்தியாவின் முன்னணிப் பல்கலைக்கழகங்களில் பயில இந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது. தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்குக் கல்விக்கட்டணம் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படுவதுடன் மாதாந்தக் கொடுப்பனவு, கல்வி உபகரணங்கள், விசேட நிதியுதவி என்பன வழங்கப்படும். தகுதியான விண்ணப்பதாரிகள் இலங்கை கல்வி அமைச்சின் ஆலோசனையுடன் திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர். மேலதிக விவரங்களை www.mohe.gov.lk என்ற தளத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
சனிக்கிழமை - மாசி 23
07.03.2026
சுபநேரம் : 03.25 - 04.55
ராகுகாலம் : 09.25 - 10.55


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரணைமடுக்குளத்தின் கீழ் 1,375 ஏக்கரில் நெற்செய்கை

கிளிநொச்சி, மார்ச் 6

இரணைமடுக்குளத்து நீரைப் பயன்படுத்தி, இம்முறை ஆயிரத்து 375 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இரணைமடுக்குளம் முழுமையான நீர்க்கொள்ளவை அடைந்துள்ளதுள்ளதை அடுத்து, இம்முறை 100 வீத சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் கே.பிரகாஸ், கமநல அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர், கழிவு நீரைப்பயன்படுத்தி சிறுபோக நெற்ச்செய்கை மேற்கொள்ளவுள்ள கமக்காரர் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (சு-113)

## கோப்பாய் கலாசாலையில் திருவள்ளுவர் குருபூசை

யாழ்ப்பாணம், மார்ச் 6

திருவள்ளுவர் குருபூசை, மாசி உத்தர நட்சத்திர நாளான நேற்றுமுன்தினம் புதன்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில், கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் கலாசாலை வளாகத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு, மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில், யாழ்ப்பாணம்தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளர் கந்தையா தர்மராஜா 'வள்ளுவத்தைப் போற்றுவோம்' எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். வள்ளுவர் பற்றி ஆசிரிய மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணக் காணொலியும் காட்சிப்படுத்தப்பட்டது. கல்வி எனும் அதிகாரத்தைப் பாவோதல் வடிவில் ஆரம்பக்கல்வி ஆசிரிய மாணவி ஜெயராணி தினேஷ் வழங்கினார். 'திருவள்ளுவம் காட்டும் பெண்மை' எனும் தலைப்பில் கலாசாலையின் ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி கௌசியா நிரோஷன் உரையாற்றினார். 'ஈழமும் வள்ளுவரும்' எனும் தலைப்பில் கலாசாலையின் முதல்வர் லலீசன் நிறைவுரை ஆற்றினார். (சு-66)

## ஆக்கப்பொருள்கள் காட்சிப்படுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 6

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி அலகால் கடந்த வருடம் ஆடை வகை தையல் ,அழகுக்கலை மற்றும் மனைப் பொருளியல் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றிய பயிலுநர்களால் ஆக்கப்பட்ட ஆக்கப்பொருள்கள் காட்சிப்படுத்தல் இன்று முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் திருமதி வனஜா செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மத்திய மாகாண பேரவைச் செயலக செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலனும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி பணிப்பாளர் திருமதி கஜானி பார்த்திபனும் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

காரைநகர் மணற்காடு கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்தும் 15 தினங்கள் பெருவிழா இடம்பெறும். (சு-66)



## வரணி மத்திய கல்லூரியில் 30ஆவது புத்தக அரங்க விழா

மக்கள் கலை இலக்கியப் பேரவையால், 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் புத்தக அரங்க விழாவின், முப்பதாவது நிகழ்வு, வரணி மத்திய கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு ஆரம்பமாகவுள்ள நிகழ்வில், மாலை 4 மணிக்கு ஈழத்து நூல்களின் அறிமுகமும், இலக்கியக் கலந்துரையாடலும் இடம்பெறும். தொடர்ந்து மாலை 5 மணிக்கு சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில், குழந்தை ம. சண்முகலிங்கத்தின் எழுத்துருவில், ஆசிரியர் பு.கணேசராசாவின் நெறியாள்கையில் 'நேர காலம்' மற்றும் ஆசிரியர் எல்.சந்திரஹசனின் எழுத்துரு, நெறியாள்கையில் 'ஒரு கோப்பை தேநீர்' ஆகிய நாடகங்கள் இடம்பெறும். அத்துடன் மாபெரும் புத்தகக் கண்காட்சியும், மலிவு விற்பனையும் இரு நாள்களும் இடம்பெறவுள்ளது. (சு-159)

## ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும்

யாழ்ப்பாணம்,மார்ச் 6

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கலைஞர்களுக்கான ஒன்றுகூடல் மற்றும் கலாசாரப் பேரவைப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

அதில் அறிக்கைகள் சமர்ப்பித்தல், புதிய நிர்வாகச் சபையைத் தெரிவு, இந்த ஆண்டுக்கான விழா மற்றும் விருதுகளுக்கான பரிந்துரைகள், கலைமன்றப் போட்டிகள் பற்றிய கலந்துரையாடல், கலைஞர்களின் ஆற்றுகைகள், அனுபவப் பகிர்வுகள் என்பன இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## நிறைவு விழாவும் பொதுக்கூட்டமும்

யாழ்ப்பாணம், மார்ச் 6

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் 44ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் கலட்டியில் அமைந்துள்ள குறித்த நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்தில் நிறுவனத் தலைவர் கெ.பிரகாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், புலம்பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வாழும் செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தைச் சேர்ந்த விஜயகுமார் சியாமளா தம்பதிகள் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)

## கொற்றாவத்தை றேஞ்சஸ் இறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், மார்ச் 6

வடமராட்சி கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும், மறைந்த வீரர்கள் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான காற்பந்தாட்டத் தொடரில், கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

காற்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் நடைபெற்றது. அரையிறுதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து, வல்வெட்டித்துறை ஆதிசக்தி அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஏக ஆதிக்கம் செலுத்திய கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. (சு-422)

## இரு நூல்களின் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 6

கந்தர்மடம் அ.அஜந்தனின் 'பயின்று முயன்றால் வெற்றி' மற்றும் 'வெந்து தணிந்த காட்டிடை' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு 37, இராமநாதன் வீதி, திருநெல்வேலி, ராஜா கிறீம் ஹவுஸ், ஹம்சியா மண்டபத்தில் இடம்பெறும். பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், வெளியீட்டுரையை சட்டத்தரணி சோ. தேவராஜா நிகழ்த்துவார். (சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுபாயில் சிக்கியோருக்கு இலவச தங்குமிட வசதி!

மத்திய கிழக்கில் நிலவி வரும் போர்ப் பதற்றங்கள் காரணமாக ஐக்கிய அரபு அமீரகம் அங்கு சிக்கியுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கான விசேட சலுகைகளை அறிவித்துள்ளது. ஈரானின் தொடர்ச்சியான தாக்குதல்களுக்குத் தகுந்த பதிலடி கொடுப்பதற்கான திட்டங்களைப் பரிசீலித்து வருவதாக சவூதி அரேபியா, குவைத், பஹ்ரைன், கட்டார், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஓமன் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய வளைகுடா ஒத்துழைப்பு சபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இதேவேளை, இந்தப் போர்ப் பதற்றம் மற்றும் விமான இரத்துச் சம்பவங்கள் காரணமாகத் டுபாய் மற்றும் அபுதாபி ஆகிய நகரங்களில் தாயகம் திரும்பமுடியாமல் சிக்கியுள்ள சுற்றுலாப் பயணிகளின் தங்குமிடம் மற்றும் உணவுச் செலவுகளை அரசே ஏற்கும் என ஐக்கிய அரபு அமீரகம் அறிவித்துள்ளது. இதன்படி, பாதிக்கப்பட்டுள்ள பயணிகள் தாங்கள் ஏற்கனவே தங்கியுள்ள ஹோட்டல்களில் தங்குமிடக் காலத்தை எவ்விதக் கட்டணமுமின்றி இலவசமாக நீடித்துக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-இ)


## பொது அறிவித்தல்
## நல்லூர் பிரதேச சபை

**நிறுக்கும், அளக்கும் உபகரணங்ளை சரிபார்த்தல் மற்றும் முத்திரை பதித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

மாவட்ட செயலரின் அறிவுறுத்தலுக்கமைய எமது சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சகல வியாபார நிறுவனங்களிலும் வர்த்தகர்களினால் பயன்படுத்தப்பட்டு வரும் சகல நிறுவை. அளவை மற்றும் நிறுக்கும் அளக்கும் உபகரணங்களினை 2026/ 2027 ஆம் ஆண்டிற்கான பரிசோதனை செய்தல். சரி பார்த்தல் மற்றும் முத்திரை பதிக்கும் செயற்பாடுகள் கீழ்க்குறிப்பிடப்படும் கால அட்டவணைக்கமைய நடைபெறவுள்ளது.

| தொ. இல | திகதி | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | 2026.03.09 | மு.ப 9.00 – பி.ப 2.00 வரை | நல்லூர் பிரதேச சபை உப அலுவலகம், கொக்குவில் |
| 2 | 2026.03.10<br>2026.03.11<br>2026.03.12<br>2026.03.13 | மு.ப 9.00 – பி.ப 2.00 வரை | நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகம், கொக்குவில் |

எனவே வர்த்தகர்கள் அனைவரும் மேற்குறித்த தினங்களில் தங்கள் வியாபார நிலையங்களில் உள்ள சகல நிறுவை. அளவை உபகரணங்களினையும் பரிசோதனைக்குட்படுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**ப.மயூரன்,**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**

(cr.47176)(N-1)



## மரண அறிவித்தல்



தோற்றம் 09 . 09 . 1945

மறைவு 05 . 03 . 2026

### கதிரேசு பத்மநாதன் (பெற்றி)

**(ஓய்வுபெற்ற ஆசிரியர் - சென் பற்றிக்ஸ் கல்லூரி)**

உடுவிலைப் பிறப்பிடமாகவும், கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு பத்மநாதன் அவர்கள் நேற்று (05.03.2026) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நவரத்தினம், செல்வரத்தினம், காலஞ்சென்றவர்களான கனகநாயகம், ஈஸ்வரி, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமணன், வானதி, ஆரணி, காலஞ்சென்ற ஆதவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயரஞ்சன், பிரணவன் ஆகியோரின் மாமனாரும், ஜாத்விகா, கவினாஷ், ஹாஷினி, அகரன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-03-2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறுக் கேட்டுக்கொள்கிறோம்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**220, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

(CS/60917) J-1



## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை
## இயக்கச்சி சந்தைத்தொகுதி கடை PS-09 இற்கான பகிரங்க ஏல அறிவித்தல்

எமது சபையின் ஆளுகைக்குட்பட்ட இயக்கச்சி சந்தைத் தொகுதியின் கடை PS-09 இனை 23.03.2026 ஆம் திகதி தொடக்கம் 31.12.2026 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏலம் கோரப்பட்டுள்ளன

பகிரங்க ஏலம் இடம்பெறும் காலம் :- 20.03.2026
பகிரங்க ஏலம் இடம்பெறும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேசசபை தலைமையலுவலகம், பளை.

**இயக்கச்சி சந்தைத்தொகுதி கடைக்கான கேள்வி அட்டவணை.**

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த ஏலக்கேள்வித் தொகை | ஏலக்கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) |
|---|---|---|---|
| 1. | PS - 09 | 34,800.00 | 5,000.00 |

**நிபந்தனைகள் :-**

1. ஏலத்தில் பங்குபற்றவிரும்புவர்கள் 06.03.2026 ஆம் திகதி தொடக்கம் 19.03.2026 ஆம் திகதி வரையான பி.ப 2.00 மணிவரையான காலப்பகுதியில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளலாம்.
2. ஏற்கனவே பச்சிலைப்பள்ளி பிரதேசசபையினால் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்ட கேள்விதாரர்கள் ஏலத்தில் பங்குகொள்ளமுடியாது.
3. ஏலக்கேள்வியில் தெரிவுசெய்யப்பட்ட சித்திகர கேள்விதாரர் உடனடியாக ஏலக்கேள்வித் தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்புப்பணத்தினை செலுத்தி ஒப்பந்தம் செய்யவேண்டும். பாதுகாப்பு வைப்புப்பணத்தை உடனடியாக செலுத்தத்தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகைக்கு வழங்கப்படும்.

**திரு.சுப்பிரமணியம் சுரேன்,**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.** (cr.47177)(N-1) **06.03.2026.**



## மரண அறிவித்தல்



பிறப்பு 08 . 09 . 1944

இறப்பு 04 . 03 . 2026

### சுந்தரமூர்த்தி தேவராஜா

**(ஓய்வுபெற்ற பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்)**

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை பண்டாரவளை, பதுளை, திருகோணமலை மற்றும் மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட சுந்தரமூர்த்தி தேவராஜா அவர்கள் கடந்த (04.03.2026) புதன்கிழமை அன்று மானிப்பாயில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி - இராசம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான தனஞ்செயராஜா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மினி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் ஸ்ரீமணி, வத்சலா, தேவகி, ஜோதிபாலன், துளசி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தெய்வேந்திரராஜா மற்றும் ஸ்ரீகந்தராஜா, விக்னராஜா, பத்மராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், கணேஷ் (இலண்டன்), கல்பனா (பிரதம முகமைத்துவ சேவை உத்தியோகத்தர் - பரீட்சைகள், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு வடக்கு மாகாணம்), அபர்ணா (அயர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், நிஷாந்தி (இலண்டன்), திருஞானசம்பந்தர், துஷந்தன் (அயர்லாந்து) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கவின் (இலண்டன்), யுவன் (இலண்டன்), லக்ஷ்மன் (இலண்டன்), மனோஷன் (இறுதியாண்டு மாணவர், கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கியல் விஞ்ஞான பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), ஓவியா (அயர்லாந்து), மஞ்சிரா (அயர்லாந்து) ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2026) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**இல. 12, கல்லூரி ஒழுங்கை, மானிப்பாய்.**
**(மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதான ஒழுங்கை)**
**மனைவி -071 869 1821, மருமகன் - 077 408 1389**
**மகள் -077 532 6474, வதிவிடம் - 021 205 4130**

(CS/60918) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு கடத்தவிருந்த போதைமாத்திரைகள் பறிமுதல்

தமிழ்நாட்டின் மரைக்காயர் பட்டினம் கடற்கரையில் இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கிவைக்கப்பட்டிருந்த இந்தியமதிப்பில் 10 இலட்சம் மதிப்பிலானபோதை மாத்திரைகள், அழகுசாதனப் பொருள்கள் கைப் பற்றப்பட்டுள்ளன. கடத்தல்காரர்கள் தப்பியோடியுள்ள நிலையில், அவர்களைக் கைது செய்ய இராமநாதபுரம் கியூ பிரிவு மற்றும் சுங்கத் துறை அதிகாரிகள் கூட்டாக நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ-இ)

## இருபத்தி மூன்றாம் ஆண்டு நினைவு நாள்

தோற்றம் 30.01.1939 | மறைவு 19.02.2003



**அமரர் கார்த்திகேசு சந்திரராசா (SLAS)**

(ஓய்வுபெற்ற பிரதேச செயலர் - வலிமேற்கு சங்கானை,
திட்ட இணைப்பாளர் - UNHCR)

**திதி: 06.03.2026**

ஆண்டுகள் இருபத்தி மூன்றானாலும்
ஆற்ற முடியாது உங்கள் பிரிவதனை - அப்பா
மனம் ஆற நாம் நினைக்கும் போதெல்லாம்
மீண்டும் உங்கள் முகம் எங்கள் கண் முன்னே - அப்பா
என்றும் நீங்கள் எங்களுடனே தான் உள்ளீர்கள் - என்ற
நினைவுகளுடன் நாமிங்கு வாழ்கிறோம்

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**"இராஜஸ்தான்"**
**9, பறாளாய் வீதி, சுழிபுரம்.**


குடும்பத்தினர்

(cs.60903 (N-1)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 10 . 1953 | மறைவு 04 . 03 . 2026



## கந்தையா சிவசெல்வம்

ஏழாலை கிழக்கு ஏழாலையைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவசெல்வம் அவர்கள் 04.03.2026 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சிவபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், சத்தியபாமாவின் அன்புக்கணவரும், நாகபூசனி (சுவிஸ்), சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான யோகலட்சுமி, மகேஸ்வரி, நேசராணியின் பாசமிகு சகோதரனும், பத்மநாதன், நித்தியானந்தன் - பரிமளா (லண்டன்), சிவானந்தன் - றஞ்சிதமலர் (கனடா), ரவீந்திரகுமார் - சேதா (ஜேர்மனி), தர்மராஜா - லோகநாயகி (லண்டன்), காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், சண்முகம் (நாகேந்திரம்), தங்கராசா, கோணேஸ் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், தர்ஷன் (Medical Laboratory Technologist-Teaching Hospital Jaffna), அனோஜா (Assistant Accountant-Ess Jey Electricals), கஜனா (Senior Quality Assurance Engineer - ADL) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீஷ் (Assistant to Accounts Clerk (JKWSSP, NWSDB Jaffna) இன் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**இல.64/20, எச்சாட்டி வைரவர் கோவிலடி,**
**சுதுமலை தெற்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 519 2442**
**077 202 2755**

(cs.60914) (N-1)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 12 . 03 . 1969 | மறைவு 05 . 02 . 2026



எமது அன்புச் சகோதரன்

## சிவகுரு சிவாஸ்காந்தன்

அவர்களது சிவபதப்பேறு குறித்த 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வும், அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இன்று (06.03.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் உரும்பிராய் வடக்கில் உள்ள இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் எமது குடும்பத்தலைவர் அமரத்துவம் அடைந்த வேளை நேரில் வந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி, முகநூல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(CS/60910) J-1

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 02 . 1961 | மறைவு 05 . 03 . 2026



## கேசவன் பகீரதி

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கேசவன் பகீரதி நேற்று (05.03.2026) வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், நடராசா கேசவனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நடராசா - மகேஸ்வரி தம்பதியரின் மருமகளும், கோவர்த்தனன், கோபிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், தவயோகராஜா, வசந்தா, சுமதி ஆகியோரின் சகோதரியும், சகாதீசன், தேவராணி, லோகேஸ்வரி, சிறிகாந்தன், இன்பரதி, பகீரதன், வசீகரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2026) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**21, பெரியமதவடி,**
**உடுவில் கிழக்கு,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 972 6655 - மகன்**

(CS 60918) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வர்த்தகப் பயிர்ச்செய்கைக்கு நாளாந்தக் கொடுப்பனவு

கொழும்பு, மார்ச் 6
கொக்கோ, மிளகு மற்றும் ஏலக்காய் செய்கையாளர்களுக்கு 1,920 ரூபா நாளாந்தக் கொடுப்பனவை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான அதிவிசேட வர்த்தமானி தொழில் ஆணையாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

அதேவேளை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள மிளகு, கோப்பி மற்றும் ஏலக்காய் பயிர்ச்செய்கைகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கான விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட் டுள்ளன.

பாதிக்கப்பட்டுள்ள மிளகு, கோப்பி மற்றும் ஏலக்காய் பயிர்ச்செய்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக ஒரு ஹெக்ரேயருக்கு 425,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

(ச-இ)



# புல்மோட்டைவெளியின் களநிலைவரம் ஆராய்வு

ஓமந்தை கமநலசேவை நிலையப் பிரிவுக்குட்பட்ட பெரியவிளாத்திக்குளம் புல்மோட்டை வயல்வெளிக்கு, நேரடியாகச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், அணைக்கட்டு அமைத்தல் மற்றும் வாய்க்கால் சீரமைப்புத் தொடர்பில் ஆராய்ந்தார்.

மக்கள் குறைகேள் சந்திப்பொன்றில், புல்மோட்டை வயல்வெளிக்கான அணைக்கட்டு அமைப்பது தொடர்பிலும், வாய்க்காலைச் சீரமைப்பது தொடர்பிலும் அந்தப் பகுதி மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கைமுன்வைக்கப்பட்டிருந்தது. இதுதொடர்பில் வவுனியா பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் என்று வவுனியா பிரதேச செயலர் மற்றும் ஓமந்தை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரால் பதில் வழங்கப்பட்டிருந்தது. இதன் தொடர்ச்சி யாக புல்மோட்டை வெளிப்பகுதிக்கு நேரடியாகச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர், அணைக்கட்டு அமைக்க வேண்டிய இடத்தைப் பார்வையிட்டதுடன், சீரமைக்கவேண் டிய நீர்ப்பாசன வாய்க்காலையும் பார்வையிட்டார். அத்தோடு பெரியவிளாத்திக்குளம் கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகளுடன் கலந்துரையாடி நிலைமைகளையும் கேட்டறிந்தார்.

(சு-246)


# விபத்து மற்றும் அவசர சிகிச்சை வலுப்படுத்த புதிய திணைக்களம்

கொழும்பு, மார்ச் 6
நாட்டில் அதிகரித்துவரும் வீதி விபத்துகள் மற்றும் திடீர் நோய்த் தாக்கங்களுக்கு விரைவாகவும், முறையாகவும் சிகிச்சையளிக்கும் வசதிகளை மேம் படுத்தும் நோக்கில், 'விபத்து மற்றும் அவசர சிகிச்சை முறைமைக்கான பணிப்பாளர் அலுவலகம்' ஒன்றை நிறுவ அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போது இலங்கையில் அவசர சிகிச்சைச் சேவைகள் பல்வேறு பிரிவுகளாகச் சிதறிக்காணப்படுவதால், அவற்றை ஒருங்கிணைத்து ஒருமுகப்படுத்துவதே இந்த அலுவலகத்தின் பிரதான நோக்கமாகும். இதனூடாக விபத்துக்குள்ளானவர்களை அல்லது தீவிர சிகிச்சை தேவைப்படுபவர்களை மிக விரைவாகப் பொருத்தமான மருத்துவ மனைகளுக்கு மாற்றுவதற்கான பொறிமுறை சீரமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-இ)

## மரண அறிவித்தல்




### கணபதிப்பிள்ளை தர்மராசா
**(ஓய்வுபெற்ற முதன்மை ஆசிரியர், ISA - சாவகச்சேரி)**

அளவெட்டி மாவத்தையை பிறப்பிடமாகவும் விநாசித்தம்பி வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தர்மராசா அவர்கள் நேற்று (05.03.2026) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மா கணபதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சிவஞானப்பிரகாசம் - செல்லமா தம்பதியரின் மருமகனும், சிவேந்திரா (ஓய்வுபெற்ற ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், அருள்செல்வன் (சிறிராம்), தயாபரன், தர்மினி ஆகியோரின் அன்பு தந்தையும், சேபனா (இசைப்பிரியா), காவேரி, சிறிரங்கன் ஆகியோரின் மாமனாரும், தருன், அகல்யா, கோகுலன், சுருதி, அகலினி, யாழினி, பிரியன் ஆகியோரின் பேரனும், பூபதி, குணரட்ணம், மனோன்மணி, தேவி ஆகியோரின் சகோதரரும், கலைவாணி, ஞானச்செல்வம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2026) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாகவச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
தயாபரன் - 0773327472
தர்மினி

விநாயகர் துணை பேச்சியம்மன் துணையுடன்

மட்டக்களப்பு மாந்திரீகப் பூசகர்
**முத்துலிங்கம் சிவசிறி சிறிதாஸ் குருக்கள் ஐயா**
(பதிவு செய்யப்பட்ட குருக்கள்) பதிவு இல- HA/BT/0128

* சிறந்த முறையில் வீடுகாவல் பண்ணுதல்
* தொழிலகம் காவல் பண்ணுதல்
* வியாபாரம் விருத்தியடைய செய்து கொடுத்தல்
* குழந்தை இல்லாதவருக்கு மாந்திரீக, பச்சிலை மூலிகை சக்தியால் குழந்தை இல்லாக் குறை தீர்த்துக் கொடுக்கப்படும்.
* கல்வியில் குறைபாடடைந்த மாணவ, மாணவிகளுக்கு கல்வியில் மேலோங்கி வரச் செய்து கொடுத்தல்.
* தடைப்பட்ட திருமணம் தடைநீக்கிச் செய்து கொடுக்கப்படும்.
* தொழிலகத்தில் பதவி உயர்வு பெறச் செய்து கொடுக்கப்படும்.
* பிரிந்த குடும்பங்களை ஒன்று சேர்த்துக் கொடுக்கப்படும்.
* உடலில் பேய்களால் சூழப்பட்ட நோய்களை நீக்கி கைகண்ட முறையில் சுகமளித்து புதிய வாழ்வு கொடுக்கப்படும்.
* வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கு யந்திரத் தகடு மூலம் செய்து கொடுக்கப்படும்.
* வெளிநாட்டிலுள்ள குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொடுக்கப்படும்.
* செவ்வாய், சனி, நாகதோஷம் போன்ற தோஷங்களை மட்டக்களப்பு மாந்திரீக முறையில் தீர்த்துக் கொடுக்கப்படும்.
* உடலில் உள்ள பலப்பல நோய்களை மாந்திரீக முறையிலும் பச்சிலை மூலிகை முறையாலும் தீர்த்துக் கொடுக்கப்படும்.
* கிரகங்களால் ஏற்பட்ட தொழில் தொடர்பான தொல்லைகளை தீர்த்துக் கொடுக்கப்படும்.
* தொழில் விருத்திக்கு யந்திரங்கள் செய்து கொடுக்கப்படும்.
* கடன் தொல்லைப் பிரச்சினையைத் தீர்த்துக் கொடுக்கப்படும்.
* கொடுக்கல், வாங்கல் பிரச்சினைகளை நீக்கிக் கொடுக்கப்படும்.
* பூத, பிரேத, பசாசி, பில்லி, வஞ்சனை, சூனியம், கண்ணூறுகளால் கஷ்டப்படும் மானிடர்க்கு மாந்திரீகத்தால் சுகவாழ்வு பெற்றுக் கொடுக்கப்படும்.

பேச்சியம்மன் துணையுடன் இவையனைத்தும் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய இல: 0772152866**

**முகவரி:**
**முத்துலிங்கம் சிவசிறி சிறிதாஸ் குருக்கள்**
சின்ன ஊறணி, மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஈஸ்டர் தாக்குதல் சம்பவம்;

# கைதுக்கு எதிரான வழக்கில் உயர்நீதிமன்று அதிரடித்தீர்ப்பு

கொழும்பு, மார்ச் 6

உயிர்த்த ஞாயிறுக் குண்டுத்தாக்குதல்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட நபரின் கைது நடவடிக்கை சட்டவிரோதமானது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பாதிக்கப்பட்ட நபரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதை உறுதி செய்த நீதிமன்றம், அவருக்கு இழப்பீடு வழங்குமாறும் அரசாங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

2019 ஏப்ரல் 21 தாக்குதல்களைத் தொடர்ந்து, அளுத்கம பிரதேசத்தைச் சேர்ந்த முகமது மில்ஹான் என்பவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீண்ட காலம் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

தனது கைதுக்கான முறையான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை என்றும் எவ்வித ஆதாரமுமின்றித் தான் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் கூறி அவர் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய் திருந்தார். மூவர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோது,

மனுதாரரின் கைதை நியாயப்படுத்துவதற்குப் போதுமான சாட்சியங்களைச் சமர்ப்பிக்கப் பாதுகாப்புத் தரப்பு தவறி விட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் ஒருவரைக் கைது செய்யும்போதும், அதற்கான காரணத்தை அவருக்குத் தெரிவிக்கவேண்டியது சட்டரீதியான கடமையாகும். அதனைச் செய்யத் தவறியது சட்டவிரோதமானது. கைது நடவடிக்கையை மேற்கொண்ட கல்கிசை பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர், தனது சொந்தப் பணத்திலிருந்து 30,000 ரூபாவை இழப்பீடாக வழங்கவேண்டும். அரசு தரப்பிலிருந்து 20,000 ரூபா இழப்பீடாக வழங்கப்படவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. (ச-இ)

# இறக்குமதிக்கான 'செஸ்'வரி நீக்கம்




கொழும்பு, மார்ச் 6

இலங்கையில் இறக்குமதி செய்யப் படும் தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் மூலப்பொருள்கள் மீதான செஸ் வரியை நீக்குவதற்கு அல்லது குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த வரி விதிப்பால் மூலப்பொருள்களின் இறக்குமதி செலவு அதிகரித்து, இலங்கையின் தயாரிப்புகள் சர்வதேசச் சந்தையில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

அதற்கமைய, அடையாளம் காணப்பட்ட 2,634 பொருள்களுக்கான செஸ் வரியை 2026 முதல் 2029ஆம் ஆண்டு வரையான நான்கு ஆண்டுகளில் முழுமையாக நீக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மத்திய கிழக்குப் போர் முடிவுக்கு வரவேண்டும்

## மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 6

மத்தியகிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச்சூழல் முடிந்தவரை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தை எவ்வளவு விரைவில் முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் முடிக்கவேண்டும். ஏனைய வல்லரசு நாடுகள் இதில் தலையிட்டுத் தீர்வுகாண வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும் - என்றார். (ச-இ)


## காணி விற்பனைக்கு

ஓட்டுமடம் அராலி வீதியில் பிரதான வீதி முகப்புடன்
யாழ்நகரில் இருந்து மூன்று கிலோ மீற்றருக்குட்பட்ட
பகுதியில் சிற்றி களஞ்சியசாலைக்கு அருகாமையில்
8 (எட்டு) பரப்பு காணி விற்பனைக்குண்டு
4 பரப்பாகவும் பிரித்து வழங்கப்படும்.
களஞ்சியசாலை. கடைத்தொதிகள்
வீடு கட்ட உகந்த இடம். தரகர் தேவையில்லை
பரப்பு ஒன்றின் விலை 15 லட்சம்
உரிமையாளர் - M.பத்மராஜ்

077 482 5587, 021 225 6883

(CS 31389)


## நகராட்சி மன்றம், சாவகச்சேரி

## குத்தகை மீள்கேள்வி அறிவித்தல் - 2026

சாவகச்சேரி நகராட்சி மன்ற அதிகார எல்லைக்குட்பட்ட. கீழ் குறிப்பிடப்படுகின்ற கருவாட்டுக்கடை இல - 02. கருவாட்டுக்கடை இல - 03 என்பனவற்றுக்கு 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் திகதி தொடக்கம் 2026 டிசம்பர் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன

1. குத்தகைக்கான கேள்விப் பத்திரங்களை கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணம். மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி நகராட்சி மன்ற அலுவலகத்தில் 2026.03.06 ஆம் திகதி தொடக்கம் 2026.03.19 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப 9.30 - பி.ப 2.30 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர் தமது தேசிய அடையாள அட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கிராமசேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

   கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி :- 2026.03.20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணி

   கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 2026.03.20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணி

2. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு தனித்தனியாக மூலப்பிரதி. இணைப்பிரதி என இரு உறைகளில் வைத்து தவிசாளர். நகராட்சி மன்றம்.சாவகச்சேரி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். 2026.03.20 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது
3. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக பட்டியலிடப்பட்டவர்களுக்கு கேள்விப் படிவம் வழங்கப்படமாட்டாது என்பதுடன் படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
5. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
6. கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
7. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதத்திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.
8. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2026 ஆம் ஆண்டு இரண்டு கருவாட்டுக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான குத்தகை அட்டவணை

| இல | குத்தகை விபரம் 2026.04.01 - 2026.12.31 | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதரவரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (இதர வரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | கருவாட்டுக் கடை இல : 02 | 146,520.00 | 1,500.00 | 2,000.00 |
| 02 | கருவாட்டுக் கடை இல : 03 | 146,520.00 | 1,500.00 | 2,000.00 |

**குறிப்பு :-** இந்நகராட்சி மன்றத்தின் கருவாட்டுக் கடையிலிருந்து 1/2Km சுற்று வட்டத்திற்குள் தனியார் எவரும் கருவாடு விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

உற்பத்தியாளர்களினால் சந்தைக்கு கொண்டு வரப்படும் விவசாய உற்பத்திப்பொருட்களுக்கு 10% கழிவு நடைமுறையினை பின்பற்ற முடியாது.

**தவிசாளர்,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**
**2026.03.06**

(ஏ.47070)

# ஈரான் மக்களுக்கு தோள் கொடுப்போம்!

## நாமல் ராஜபக்ச தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 6

நாங்கள் ஈரானுடன் நிற்கிறோம். ஈரான் எப்போதும் இலங்கையின் உண்மையான தோழனாக இருந்து வந்துள்ளது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஈரானின் முன்னாள் ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதிநெஜாத் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டாரென வெளியான செய்திகள் குறித்து தனது இரங்கலை வெளியிடுகையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மஹ்மூத் அஹ்மதிநெஜாத் இலங்கையின் மிக நெருங்கிய நண்பர். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துவதில் அவர் ஆற்றிய பங்கு பாராட்டத்தக்கது.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய நவீனமயமாக்கல் மற்றும் உமா ஓயா பன்முக அபிவிருத்தித்திட்டம் போன்ற திட்டங்களை ஆரம்பித்துவைப்பதில் அவர் பங்காற்றினார். ஈரான் எப்போதும் இலங்கையின் உண்மையான தோழனாக இருந்து வந்துள்ளது.

இந்த இக்கட்டான தருணத்தில் இலங்கை மக்கள் ஈரான் மக்களுடன் நிற்பார்கள். சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் போர்ப் பாதையைத் தவிர்த்து நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவளை...

களும், தமிழ்நாட்டின் அரியமான் கடற்பரப்பில் வைத்து தமிழ்நாட்டு கடலோரக் காவற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கடற்றொழிலுக்குச் சென்ற அவர்கள் இருவரும் மறுநாள் கரைதிரும்பாத நிலையில், அது தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டதுடன், கடற்படைக்கும் தகவல் வழங்கப்பட்டிருந்தது.

காணாமற்போன மீனவர்கள் எரிபொருளும், உணவும் இல்லாமல் கடலில் தத்தளித்தனர் என்றும், நாம் அவர்களுக்கு உணவும் எரிபொருளும் வழங்கினோம் எனவும் இந்திய மீனவர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து, கடந்த ஐந்து நாள்களாக பல்வேறு இடங்களில் அவர்கள் தேடப்பட்டு வந்தனர். இவ்வாறான நிலையிலேயே, அரியமான் கடற்பரப்பில் வைத்து தமிழ்நாட்டு கடலோர காவற்படையால் அவர்கள் இருவரும் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் கிடைத்துள்ளன.

(அ-ம-66-23-100-26)

## யாழில்...

மத்திய கிழக்கில் ஏற்பட்ட போர் காரணமாக, யாழ்ப்பாண மக்கள் எரிபொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு ஆர்வம்காட்டி வந்தனர். இதனால், மாவட்டத்தில் உள்ள அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் கடந்த 6 நாள்களாக வரிசைகள் ஏற்பட்டிருந்தன. எனினும், தொடர்ச்சியான விநியோகம் உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, எரிபொருள் வரிசைகள் நேற்று வெகுவாகக் குறைந்தன. சில இடங்களில் வரிசைகள் இருந்தபோதிலும், மிகநீண்ட வரிசைகளாக அவை அமையவில்லை. யாழ்ப்பாணத்தின் அநேகமான எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இன்றும் லட்சக்கணக்கான லீற்றர் பெற்றோல் விநியோகம் செய்யப்படவுள்ளது. இதனால், இன்றுடன் நிலைமை இயல்புக்குத் திரும்பும் என்று பெற்றோலிய கூட்டுத்தாபனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-ம-17)

## ம.எண்ணெய்...

யோகம் இடம்பெறும் என்று கூறப்பட்டபோதிலும், சில எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. இதையடுத்தே, விநியோகத் தடங்கல் ஏற்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும், மேலும் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் இன்று விநியோகம் இடம்பெறும் என்று கூறப்பட்டுள்ளது. (அ-ம-17)

## தரமற்ற...

உள்ளன என்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கை மின்சாரசபை சமர்ப்பித்துள்ள மின்சார தேவைக் கணிப்பை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், தொடர்ச்சியான மின்சார விநியோகத்தைப் பேணுவதில் சவால்கள் ஏற்படும். ஏப்ரல், ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் மின்சாரத் தேவைகள் முறையே 3030, 3070 மற்றும் 3000 மெகாவாட் அளவை எட்டினால் மின்சார உற்பத்தித் திறனில் குறைபாடு ஏற்படும் அபாயம் உள்ளது.

நிலக்கரி மின்நிலையங்களில் ஏதேனும் ஒரு அலகு அல்லது பெரிய மின்நிலையம் செயலிழந்தால், இரவு நேர உச்சத் தேவையை நிறைவேற்றுவதில் கடுமையான சிக்கல் உருவாகும். தரம் குறைந்த நிலக்கரியில் அதிக சாம்பல் இருப்பதாலும், நீராவி வெப்பநிலை வரம்பு மீறப்படுவதாலும் கொதிகலன் அமைப்புகளில் அதிக வெப்பம் ஏற்படச் சாத்தியங்கள் உள்ளன. இதனால், மின்சார உற்பத்தி பாதிக்கப்படும் அபாயமும் காணப்படுகின்றது - என்றுள்ளது. (அ-ம-26)

## கடற்...

விடுத்துள்ளார். இந்துமா சமுத்திரத்தில் இலங்கைக்கு அருகாக ஈரானின் போர்க்கப்பல் அமெரிக்காவால் தாக்கப்பட்டுள்ளது. அத்துடன், தற்போது மற்றொரு ஈரானியக் கப்பல் இலங்கையில் நங்கூரமிட்டுள்ளது. இவ்வாறான நிலையிலேயே, போர்ப் பதற்றங்களைக் கருத்திற்கொண்டு இலங்கைக் கடற்பரப்புக்கு வெளியே சென்று மீன்பிடியில் ஈடுபட வேண்டாம் என மீனவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் சந்திரசேகர் நாடாளுமன்றத்தில் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

இந்துமா சமுத்திரத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு மீனவர்கள் செயற்பட வேண்டும். இந்தப் பதற்றத்தால் ஏற்படக்கூடிய அனைத்து வகையான பாதிப்புக்களும் எமக்கே கெடுதலாக அமையும். எனவே, நிலைமையின் தீவிரத்தை எமது மீனவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். இந்தப் பதற்றங்கள் தணியும்வரை, இலங்கைக் கடற்பரப்புக்கு வெளியில்சென்று மீன்பிடியில் ஈடுபட வேண்டாம் - என்றார். (அ-ம)

## கசிப்புக்குகை...

600 லீற்றருக்கும் மேற்பட்ட கோடா, கசிப்பு என்பன கைப்பற்றப்பட்டன.

விசுவமடு தொட்டியடி பகுதியில் கசிப்புக் காய்ச்சப்படுவது தொடர்பில் பொதுமக்கள் பொலிஸாரிடம் பல தடவைகள் முறைப்பாடு வழங்கியுள்ளனர். எனினும், இதுவரை காத்திரமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இதையடுத்தே, இளைஞர்கள் பலர் திரண்டு கசிப்புக் காய்ச்சும் இடத்தை நேற்று முற்றுகையிட்டனர். கசிப்புக் காய்ச்சிய நபர்கள் தப்பியோடிய நிலையில், அங்கிருந்த 600 லீற்றருக்கும் மேற்பட்ட கசிப்பு, கோடா என்பவை மக்களால் கைப்பற்றப்பட்டன. அவை புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ-ம-113)

## முதலாவது...

இன்னிங்ஸில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி முன்னிலையில் உள்ளது.

119ஆவது 'வடக்கின் போர்' கிரிக்கெட் ஆட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சற்குணராஜா வினுக்சன் 22 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குக் களமிறங்கிய யாழ்ப்பாணம்மத்தியகல்லூரிஅணிஅனைத்து விக்கெட்களையும் இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஏ.அபிஷேக் 23 ஓட்டங்களைப் பெற்றார். 24 ஓட்டங்கள் முன்னிலையுடன் பதிலுக்குக் களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி நேற்றைய நாள் நிறைவில், விக்கெட் இழப்பின்றி ஓட்டங்கள் எதையும் பெறாத நிலையில் உள்ளது. (அ-ம)

## காட்டிக்...

தெரிவித்ததாவது:-

இந்துமாசமுத்திரத்தில், இலங்கைக்கு அருகாகப் பயணித்த ஈரானியப் போர்க் கப்பலை இலங்கையே காட்டிக்கொடுத்தது. ஈரானியக் கடற்படையினர் உயிரிழந்தமைக்கு எமது அரசாங்கம் இருக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும். 11 மணித்தியாலங்களாக அவர்கள் உதவி கோரியிருக்கின்றனர். இருப்பினும் அரசாங்கம் அவர்களுக்கு உதவி வழங்கவில்லை. உதவி வழங்காவிட்டாலும் பரவாயில்லை காட்டிக் கொடுக்காமல் இருந்திருக்கலாம். உண்மையிலே இது வேதனைக்குரிய விடயமாகும்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் போர் வெறி பிடித்து அலைகின்றன. பல்வேறுபட்ட போர்க் குற்றங்கள் அவர்களால் நிகழ்த்தப்படுகின்றன. எனவே, அவர்களை அமைதியின் பாதைக்குக் கொண்டுவரும் முயற்சிகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால், எமது அரசாங்கம் கிட்டத்தட்ட 100 ஈரானிய கடற்படையினர் இறப்பதற்குக் காரணமாக இருந்திருக்கின்றது - என்றார். (அ-ம)

## அமெரிக்க...

மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவில் பயிற்சியை முடித்துக் கொண்டு திரும்பும்போதே, ஈரானியக் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலால் நாங்கள் ஒரு நாடாக கடும் நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. பல்வேறு துறைகளில், பல்வேறு விதமான பாதிப்புக்கள் எமக்கு ஏற்படும். எனவே, அமெரிக்காவின் தாக்குதலை அரசாங்கம் கண்டித்திருக்க வேண்டும். குறைந்தபட்சம் கண்டனம்கூட தெரிவிக்காதமை ஏன்?

இந்தியப் பெருங்கடலில் அமைதியை உறுதிப்படுத்தும் ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின் பிரதான பங்குதாரராகவும் உள்ளது. எனவே, இந்த விடயத்தில் நாம் தலையிட வேண்டும். அநுர அரசின் செயற்பாடுகள் காரணமாக, இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்கள் ஈரான் மீதான இந்தத் தாக்குதல் குறித்து பெரும் வேதனையிலும் ஏமாற்றத்திலும் உள்ளனர். எங்களை மேலும் சிக்கலில் தள்ளவேண்டாம் என்று அரசாங்கத்தைக் கோருகின்றோம் - என்றார். (அ-ம)

## ஈரானியக்...

அனுமதி கோரியிருந்த நிலையில் 15 மணிநேரப் பரிசீலனையின் பின்னர் அதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இது தொடர்பில் ஜனாதிபதி அநுர தெரிவித்ததாவது:

இலங்கையின் கடல் பகுதிகள் மற்றும் வான்வெளியை எந்தவொரு நாடும் விரோதமான முறையில் அல்லது மற்றொரு நாட்டிற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் பயன்படுத்த அனுமதிக்கப்படாது. அதுபோல், எந்தவொரு சர்வதேச மோதலிலும் எங்கள் பிரதேசம், எங்கள் கடற் பரப்புகள், எங்கள் வான்வெளி ஆகியவற்றை மோதலில் எந்தவொரு நாட்டுக்கும் சார்புடைய தாகவோ அல்லது எந்த நாட்டுக்கும் தீங்கு விளைவிக்கும் விதமாகவோ பயன்படுத்த நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். அதுதான் எங்கள் நிலைப்பாடு. இலங்கையில் நங்கூரமிடுவதற்குக் கோரிய ஈரானியக் கப்பலுக்கு இந்தக் கொள்கைகளின் அடிப்படையிலேயே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒரு தேசமாகவும் ஒரு நாடாகவும், நடுநிலையைப் பேணுகையில், எங்களுக்கு மனிதநேயம் முதலிடத்தில் உள்ளது. எனவே, நாங்கள் சிறிதும் தயங்க மாட்டோம். மனிதகுலத்தைப் பாதுகாக்க, மனித உயிர்களைப் பாதுகாக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் இருந்தால், அந்த நடவடிக்கைகளை எடுக்க நாங்கள் சிறிதும் தயங்க மாட்டோம். அதுதான் ஒரு நாடு எடுக்க வேண்டிய சிறந்த கொள்கை என்று நான் கருதுகின்றேன் - என்றார். (அ-ம)

## மூன்றாம்...

கம், உயிர்தஞாயிறுத் தாக்குதல் வழக்கை மீள விசாரித்து வருகின்றது. இந்த விசாரணைகளின் அடிப்படையில், புலனாய்வுத்துறையின் முன்னாள் பிரதானி சாலே அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவரை 90 நாள்கள் தடுத்துவைத்து விசாரணை செய்ய பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. இவ்வாறான நிலையிலேயே, ஈஸ்டர் தாக்குதலின் மூன்றாவது சந்தேகநபராக அவர் பெயரிடப்பட்டுள்ளார் என்று கோட்டை நீதவான் நீதிமன்றுக்குக் குற்றப் புலனாய்வுப் பிரிவு தகவல் வழங்கியுள்ளது. (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுப் பயணங்களில் ஜனாதிபதிகளின் செலவுகள்

## நாடாளுமன்றில் அறிக்கை சமர்ப்பிப்பு

**கொழும்பு, மார்ச் 6**

**முன்னாள் ஜனாதிபதிகள் தங்களது பதவிக்காலத்தில் வெளிநாட்டுப் பயணங் களுக்காகச் செலவிட்ட நிதி குறித்த விவரங்களை விவசாயப் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க கடந்த செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளார்.**

அந்த அறிக்கையின்படி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச 2010 முதல் 2015 வரையான பதவிக் காலத்தில் வெளிநாட்டுப் பயணங் களுக்காக 357 கோடி ரூபா செலவிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 38 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரை கோத்தாபய ராஜபக்சவுக்கு வெளிநாட்டுப் பயணங்களுக்கு 200 கோடியே 60 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 16 வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளதோடு, அதற்காக 53 கோடி ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது. அத்துடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்ற காலப்பகுதியிலிருந்து இதுவரை 7 வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளதோடு, அதற்காக ஒரு கோடியே 49 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-இ)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் மானிப்பாய் நகரத்தில்**
**26 நிலபரப்புக் காணி விற்பனைக்கு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- மானிப்பாய் நகரம் சோதி வேம்படி வித்தியாலயம் அருகில் வேம்டி வீதியில்.
- யாழ் - காரைநகர் பிரதான வீதி 300 m தூரத்தில்
- வங்கிகள், பாடசாலைகள் பிரதான வர்த்தக நிலையங்கள் 400m தூரத்தில்.
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை, முன் காணி துண்டு 32,00000 (முப்பத்தி இரண்டு இலட்சம்)
- நடு துண்டு ஒரு பரப்பின் விலை 28,00000 (இருபத்தி எட்டு இலட்சம்)
- பின் துண்டு ஒரு பரப்பின் விலை 26,00000 (இருபத்தி ஆறு இலட்சம்)
- பார்வையிடும் நேரம் - காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

**தொடர்பு:- 074 029 2338**
**076 990 3039**
**077 288 0152**

(CS 31384) A

# தூதரகங்களுக்கு விசேட பாதுகாப்பு

கொழும்பு, மார்ச் 6

மத்திய கிழக்கில் அதிகரித்துவரும் பதற்றநிலையைத் தொடர்ந்து, தலைநகர் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் தங்கும் ஹோட்டல்கள் என்பவற்றுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மத்திய கிழக்கில் நிலவும் தீவிரமடைந்த சூழ்நிலை காரணமாக வெளிநாட்டுத் தூதரகங்களைக் குறிவைத்துத் தாக்குதல் அல்லது ஆர்ப்பாட்டங்கள் நடைபெறக்கூடும் என்ற அச்சம் எழுந்துள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொலிஸ்மா அதிபர் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்துமாறு சிறப்பு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

(ச-இ)

## யூஸ் கடை விற்பனைக்கு

யூஸ் கடைக்கான முழுமையான உபகரணங்களும் விற்பனைக்கு உள்ளது.

**078 582 8666**

(CS 31386) (N-1)

## 2K28 A/L வரலாறு

மாவட்ட, தேசிய சாதனையாளர்களை உருவாக்கும் உங்கள் ஆசிரியர்

**M.பத்மன்** B.A (Hons) History, M.A (History) M.Ed (O.U.S.L)

கற்பிக்கும் இடங்கள்

| | |
|---|---|
| **D.M.I** ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். | உயர் கலைக் கல்லூரி குளப்பிட்டி, கொக்குவில். |
| **BITSMANS** மானிப்பாய். | நியூ ஸ்ரார் கல்வி நிலையம் K.K.S.வீதி, சுன்னாகம். |

A/L - 2K28 புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன
A/L - 2K27 புதிய பிரிவுக்கான அனுமதிகள் வழங்கப்படும்

(CS 31388) A

## TECHNO WORLD
### தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

## A/L 2028
### A/L தொழில்நுட்பப் பிரிவு

- ஆரம்பம் - 07.03.2026 (சனிக்கிழமை)
- நேரம் - காலை 8.30

**A/L 2026, 2027**
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு: **077 017 5346**

(m.21023) (N-1)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 . 02 . 1970 | 04 . 03 . 2026 |

### சுந்தரராஜன் அனெக்ஸ்கீயூடா (ஜெயந்தி)

பாண்டியந்தாழ்வை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரராஜன் அனெக்ஸ்கீயூடா (ஜெயந்தி) அவர்கள் கடந்த (04.03.2026) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் சிங்கராசா - காலஞ்சென்ற தவராணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கோபால் மற்றும் - நல்லசிவம் தம்பதியரின் அன்பு மருமகளும், சுந்தரராஜனின் பாசமிகு மனைவியும், நிதுஷா, சஞ்ஜய், மெஸ்வின் ஆகியோரின் பாசமிகு தாயாரும், வர்மிலனின் அன்பு மாமியும், சஷ்விக் அவர்களின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீபன், தங்கம்மா, இளையதம்பி, இராசம்மா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், றெஜி (கனடா), தர்சன் (கனடா), தர்சினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வதனா (கனடா), அனுசியா (கனடா), கருணராசா (டுபாய்), மங்கலராஜன், மங்கலகுமாரி, கமலகுமாரி, விமலகுமாரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான றோசாமலர் (பிரான்ஸ்), யோகரெட்ணம் மற்றும் தவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மருமகளும், தங்கராணி, தேவராசா, தங்கராசா, செல்வராசா (இந்தியா), காலஞ்சென்ற யேசுராசா ஆகியோரின் பெறாமகளும், மயூரன் (கனடா), மயூரி, துஷாந் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவர்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (06.03.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பாண்டியந்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
70/16 கொழும்புத்துறை வீதி, பாண்டியந்தாழ்வு.
077 975 6704, 077 2477957

(CS/60919) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.